புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# மூ(த்த)தேவி

ச. மணிமேகலை,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் – 635601, திருப்பத்தூர் மாவட்டம்.

## முன்னுரை

சைவ - வைணவப் புராணங்களில் மூதேவியானவள், பாற்கடலைக் கடைந்தபோது திருமகளுக்கு முதலில் தோன்றியவளாக வருணிக்கப்படுகிறாள். முதலில் தோன்றிய தேவி என்பதால் அவள் 'மூதேவி' என்று ஆனாள். நம் முதுதந்தையரை எப்படி 'மூதாதையர்' என்று அழைக்கிறோமோ அப்படித்தான் மூத்ததேவிக்கு 'மூதேவி' என்ற பெயர் வந்தது.

பல கோவில்களில் 'ஜேஸ்டா தேவி' தவ்வை என்ற பெயரில் வழிபடப்படுகிறாள். வடமொழியில் ஜேஸ்டா என்றால் மூத்தவள் என்று பொருள்.

தவ்வையின் கொடி காக்கைக் கொடி, வாகனம் கழுதை, அவளின் கையில் துடைப்பம், தற்போது கூட வீட்டைச் சுத்தப்படுத்தும் துடைப்பத்தை மிதிக்கக் கூடாது என்று வீடுகளில் சொல்வது வழக்கம். மேலும் தமிழர் தெய்வமான மூதேவி மழைக் கடவுளான வருண பகவனின் மனைவியாக தமிழிலக்கியங்கள் கூறுகின்றன. மூதேவி (எ) மூத்ததேவியின் வரலாற்றை ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## மூதேவி ஓர் அறிமுகம்

யாரையாவது வசைபாட மூதேவி என்ற சொல் அதிகமாக பயன்படும். கிராமங்களில் வயதான பெண்மணிகள் மாலையில் விளக்குபோடு இல்லையேன்றால் மூதேவி வந்து விடுவாள். காலை 5 மணி மற்றும் மாலை 6 மணிக்கு மேல் தூங்கினால் மூதேவி பிடித்து விடுவாள். வாசலைப் பெறுக்கி கோலம் போடவில்லையென்றால் மூதேவி அழையா விருந்தாளியாக வந்துவிடுவாள். மாலை 5 மணிக்கு மேல் ஒரு பெண் முகம் கழுவி தலை முடியாவிடில் "ஏண்டி மூதேவி புடிச்ச மாதிரி இருக்க, போய் முகம் கழுவி, தலைவாரி ஸ்ரீதேவி மாறி லட்சணமா இரு" என்றெல்லாம் கிராமத்து பெண்மணிகள் கூறுவார்கள். ஆனால் உண்மையில் மூதேவி என்றால் யார்? ஏன் அப்பெயர் நிலைப்பொயிற்று.

ஜேஷ்டா தேவியின் சிற்ப அமைப்பை பூர்வகரனாகமம், லிங்க புராணம் போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன. பல்லவர் காலத்தில் உச்சத்தில் இருந்த ஜேஷ்டா தேவி வழிபாடு, பிற்கால சோழர் காலத்துக்கு பிறகு கொஞ்சம் கொஞ்சமாக கைவிடப்பட்டுள்ளது. இருப்பினும் தமிழகத்தின் வடமாவட்டங்களில் உள்ள பல்லவர் கால, சோழர் கால சிவன் கோயில்களில் இன்றும் ஜேஷ்டா தேவி வழிபாடு செல்வ வளத்தை பெருக்குவதோடு ஆராக்கிய வாழ்வின் முக்கிய தேவையான நிம்மியான தூக்கத்தையும் தருகிறது என்று நூல்கள் கூறுகின்றன.

## மூதேவி எங்கே குடியிருப்பாள்?

1. சண்டை சச்சரவுகள் நிறைந்த இல்லம்
2. பொய்யும் கடுமையான வார்த்தையும் பேசுபவரிடம்
3. தீமைகளும் கொடுமைகளும் செய்பவரிடம்
4. உடல் தூய்மை, மனத்தூய்மை, சுற்றுச்சூழல் தூய்மை, வாக்குத்தூய்மை ஆகிய ஐந்து வகை தூய்மைகளையும் கடைப்பிடிக்காதவரிடம்

5. பெரியவர்களை மதிக்காதவரிடம்
6. போலியான சாமியார்களிடம்
7. வழிபாடும் பூஜைகளும் இல்லாத இல்லத்தில்
8. சுயநலமிக்கவர்களிடம்
9. தானம், தயை, தன்னடக்கம் எனப்படும் பண்புகள் துளியும் இல்லாதவரிடம்
10. காமம், கோபம், மோகம் போன்ற தீயகுணங்கள் கொண்டிருப்பவரிடம்

இக்குணங்கள் எல்லாம் தீயவையாக உள்ளன. தீய குணங்கள் உள்ளவர்களை நல்லவர்களாக மாற்ற மூதேவியின் அருள் தேவைப்படுகிறது.

இலக்கியத்தில் மூதேவி

சங்க இலக்கியங்களில் கொற்றைவைக்கு அடுத்ததாக அதிகமாகப் பாடப்படும் தெய்வம் மூதேவி. சங்க இலக்கியங்களில் மூதேவியை மாமுகடி, தவ்வை, காக்கை கொடியாள், கழுதை வாகினி, பழையோள், சேட்டை அல்லது ஜேஷ்டா என பல பெயர்களில் அழைக்கப்படுகிறாள். வைதீக மதம் விரிவடையும் போது அதை ஏற்றுக்கொள்ளாத அவர்கள் மூதேவியை அம்மதத்தினுள் கரைத்து, அதற்கு வேறு சாயம் பூசி இழிவாக மாற்றினர். உதாரணமாக ''சேட்டை தன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரோ'' என்று மூத்ததேவியை வறுமையின் சின்னம் என தொண்டரடிப்பொடியாழ்வார் நகையாடுகின்றார்.

ஏனென்றால் லட்சுமியிடம் தான் செல்வங்கள் செழித்து இருக்கும் என்ற கருத்தினை அடிப்படையாக கொண்டு பாடலை பாடியுள்ளார். வண்ணார் இன மக்களுக்கு குழந்தை வரம் அளிக்கும் தெய்வமாக சேட்டை இருந்தாள் என்பதை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றது.

சங்க இலக்கியங்களில் இவர் மாமுகடி (கரிய சேட்டை ஆகிய மூதேவி) காக்கைக் கொடியோள், பழையோன், காடுகிழாள், கானமா செவ்வி என்று சங்க இலக்கியங்கள் ஏற்றிய போற்றும் கொற்றவை, மிகப் பழைமையான தமிழர் பெண்தெய்வமாக இனங்காணப்பட்டவள். கொற்றவைக்கு அடுத்ததாக சங்க இலக்கியங்களில் அதிகமாகப் பாடப்படும் தெய்வம் மூதேவி, ''தவ்வை'' என்ற பெயரில் பல இலக்கியங்களில் மூதேவி குறிப்பிடப்படுகின்றாள். தவ்வையானவள் சங்க இலக்கியங்களில் 14 பெயர்களால் அழைக்கப்படுகின்றாள்.

உரத்தின் அடையாளம் 'தவ்வை' நெற்கதிர்களின் அடையாளம் 'திருமகள்' நெற்கதிர்கள் செழித்த வளர வேண்டும் என்றால் உரம் மிக அவசியம்.

இங்கே உரமாகத் திகழ்பவள்தான் தவ்வை. அதன் காரணமாகவே பெரும்பாலான தவ்வைச் சிற்பங்கள் வயல்வெளிகளை ஒட்டியே கிடைத்திருக்கின்றன. ''தவ்வை'' என்ற பெயரில் பல இலக்கியங்களில் மூதேவி குறிப்பிடப்படுகிறாள். இதனை,

''அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்''

( அதிகாரம் - 17 , குறள் - 167 )

என்னும் குறளில், பொறாமைப்படுகிறவனிடத்தில் வெறுப்புக்கொண்டு சீதேவியானவள் தன் அக்காளாகிய மூதேவியிடம் அவனைக் காட்டிவிட்டு அவளை விட்டுப் போய்விடுவாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

''மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளான் தாமரையி னாள்''
''தவ்வையும் தாயும் தழி இயினர்''

(பெருங்கதை – 1)

''தவ்வையும் தோழியும் கண்ணினர்''

(சீவக. 1873)

என்னும் பாடலடிகளில் தவ்வை வழிபாடு குறித்த குறிப்புகள் இடம்பெறுகின்றன. பல்லவர் காலத்தைக் காட்டிலும் சோழர் காலத்தில் சேட்டை வழிபாடு சிறப்பாக இருந்துள்ளதை கல்வெட்டுகள் கூறுகின்றது.

ஏழன்னை (சப்த மாதர்) வழிபாட்டின் மறுபட்ட கோலங்களில் சில இடங்களில் தவ்வைக்கும் இடமளிக்கப்பட்டிருக்கிறது. சிறிதுகாலம் சமணர்களின் தெய்வமாகவும் தவ்வை இடம்பிடித்துள்ளாள்.

*மூதேவியை கவுளாக உங்களால் நம்ப முடியவில்லையா? உங்களை நம்ப வைக்க இன்னும் சில ஆதாரங்கள் இதோ, என்னைப்பார் யோகம் வரும் என்று எதற்காக கழுதை படத்தை மாட்டி வைத்துள்ளார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா? வேறு எதாவது படத்தை மாட்டி வைத்திருக்கலாமே. மூதேவி அவர்கள் கழுதையின் மீது அமர்ந்து தான் வருவார்கள் இதனால்தான் இந்த கழுதை படத்தை எல்லோர் வீட்டிலும் மாட்டி வைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.*

*பொதி சுமப்பது தான் கழுதையின் வேலை. குறிப்பாக துணி வெளுப்பவர்கள் தான் இந்த கழுதையை, துணி பொதி சுமப்பதற்காக கழுதையைக் பயன்படுத்திக் கொள்வார்கள். அதே போல் மனிதர்களின் மனதிலுள்ள அழுக்கைச் சுத்தம் செய்யக் கூடிய வேலையை இந்த மூதேவி செய்கின்றாள்.*

*அரிய வகை ஜேஷ்டா தேவி மற்றும் கஜலட்சுமி சிற்பம்*

*பல இடங்களில் மூதேவியானவள் தனியாகவே காட்சித்தருகிறாள். ஆனால் இச்சிற்பத்தில் அரிய காட்சியாக கஜலட்சுமியும், மூதேவியும் ஒன்றாக இருப்பது போன்ற சிற்பத்தை 2018 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7 ஆம் நாள் தொல்லியல் அறிஞர் திரு. மா. சந்திரமூர்த்தி அவர்கள் தலைமையில் சென்ற குழுவால் (ச. மணிமேகலை, முனைவர் க. கவிதா) வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, திருமணி கிராமத்தை அடுத்துள்ள ஒய்யாத்தூரில் கஜலட்சுமியுடன் கூடிய மூதேவியின் அரிய வகை இச்சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காலம் கி.பி 6 ஆம் நூற்றாண்டு என்று கணித்துள்ளார்.*



*இவள் இரண்டு கால்களையும் பரப்பி, அமர்ந்த நிலையில் இரு கரங்களுடன் காட்சியளிக்கிறாள். இவளது மேல்வலக்கரம் அபய முத்திரையிலும், இடதுக்கரம் தொடை மீது அமைந்து ஊரு முத்திரையிலும் காட்சியளிக்கிறது.*

*தலையில் கரண்ட மகுடம், காதுகளில் மகரக்குண்டலங்கள், கழுத்தில் சவடி, சரப்பளி, கைகளில் கேயூரம், முன்கைகளில் காப்பு, இடையிலிருந்து முழங்காலுக்கு கீழ் வரை முழுநீள ஆடைத் தரித்து நமக்கு காட்சியளிக்கிறாள்.*

*வட்டமான முகம், அகன்ற நெற்றி, கோடிட்ட புருவம், எள் பூ நாசி, அகன்ற தோள், மார்புக்கச்சை அற்ற மேலுடல், பெருத்த தனங்கள், சற்று பெருத்த வயிறு, பரப்பிய கால்கள் ஆகிய அமைப்புகளை கொண்டு இச்சிலை பிற்கால சோழர்க்காலத்தை சார்ந்ததாக கருதலாம்.*

மூதேவியின் வலப்புறம் அவரது மைந்தனான மாந்தன், வலதுக்காலை தொங்கவிட்டு இடதுக்காலை மடக்கி, இரண்டு கரங்களுடன் மாட்டுத்தலையும், மானிட உடலுமாக காட்சியளிக்கிறாள். மூதேவியின் இடப்புறம் மகளான மாந்தி வீற்றிருக்கிறாள். இவர் தன் வலதுக்கரத்தில் மலரைப் பற்றிய நிலையிலும், இடதுக்கரம் தொடைமீது ஊரு முத்திரையிலும் அமைந்து, தலையில் கரண்ட மகுடம், காதுகளில் புடைப்பு குண்டலம், கழுத்தில் கழுத்தணிகள், ஆடையற்ற மேலுடல், இடையில் இடைக்கச்சை, தோளில் கேயுரம், முன் கையில் காப்பு ஆகிய ஆடை அணிகலன்களுடன் காட்சியளிக்கிறார்.

மூதேவியின் வலதுத்தோள் பக்கம் துடைப்பம் காட்டப்பட்டுள்ளது. இடதுத்தோள் பக்கம் இவளது கொடியான காக்கை காட்டப்பட்டுள்ளது. மூதேவியின் வலதுக்கால் அருகில் கழுதை வாகனம் காட்டப்பட்டுள்ளது. எனவே இவள் கழுதை வாகினி என்றும், காக்கை கொடியாள் என்றும், மூதேவி என்றும் அழைக்கப்படுகின்றாள்.

முடிவுரை

மூத்த தேவியாகப்பட்டவள் தீமைகளை வீட்டிலிருந்து விரட்டி அடிக்கக் கூடியவள். நமக்கு நன்மைகளை செய்பவள். நம்மிடத்திலுள்ள கெடுதல்களை நம்மிடருந்து வெளியே விரட்டி அடிப்பவள் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக உணரலாம். இனி யாரையாவது பார்த்து மூதேவி என்று திட்டுவதற்கு முன் கட்டாயம் நாம் அனைவரும் சிந்திப்பீர்கள் எனலாம்.

பயன்பட்ட நூல்கள்

1. சுப்பிரமணியன், ச.வே., திருக்குறள் தெளிவுரை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
2. கொங்குவேளிர், பெருங்கதை, சாந்தி சாதனா, சென்னை.
3. ரா. சீனிவாசன், சீவக சிந்தாமணி தெளிவுரை, அணியகம் பதிப்பகம், சென்னை.
4. தினமணி நாளிதழ், 07.012018 .

********* ********* ********** ********* ********* ********** ********** **********